**OS.No.232/2018** **D.W.3-லட்சுமி** **01.09.2025**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பிரதிவாதி தரப்புச் சான்றாவனம் 20 அசலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது வங்கியில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் ஜி சுப்பிரமணி என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதித்தரப்பு சான்றாவனமான மூன்று என் தகப்பனார் வங்கியில் அடமானம் போட்ட ஆவணம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தில் என் தகப்பனாரின் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் ஜி சுப்பிரமணிய நாயக்கர் என்று கையொப்பம் போடுவார் என்றால் சரிதான். எனது ஆவணத்தில் ஜி சுப்பிரமணி என்று தான் கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றால் சுப்பிரமணி நாயக்கர் என்று போடப்பட்டுள்ளது. தற்போது சாட்சி சுப்பிரமணி என்றுதான் கையொப்பம் போடப்பட்டுள்ளது என்று ஒப்புக் கொண்டுள்ளார். எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை என் தகப்பனார் சுப்பிரமணி எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் தாவா சொத்தை 1997 ஆம் ஆண்டு வரை அடமான பத்திரங்கள் மூலம் சொத்தை அடமானம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதி தரப்பு சான்றாவனம் 20-ல் தெற்கு பக்கத்தில் கிரிஜா, வசந்தா, சரசு மற்றும் லட்சுமி ஆகியோருக்கு 5 அடி பொது வழி பாதை விடப்பட்டுள்ளது என்றால் 30 வருடங்களாக நான் பத்து அடி அனுபவித்து வருகிறேன். எனக்கு 10 அடி கொடுக்கப்பட்டது. மேற்படி ஆவணத்தில் கிரிஜா, வசந்தா, சரசு மற்றும் எனக்கும் தனியாக பாதை ஒதுக்கி உள்ளார்

என்றால் சரிதான். அவ்வாறு எழுதிக் கொடுக்கப்பட்ட காலத்தில் இருந்து கிரிஜாவும் வசந்தாவும் அந்த இடத்தில் குடி இருக்கிறார்கள். என் தகப்பனார் வசந்தா, கிரிஜா மற்றும் ஏழுமலை ஆகியோருக்கு கிரையபத்திரமாக எழுதிக் கொடுத்தார். என் தகப்பனார் எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றும் நான் பொய்யாக ஒரு கிரைய பத்திரத்தை எழுதிக் கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு என் தகப்பனார் சொத்தை எழுதிக் கொடுத்து இருந்தால் முழு சொத்தையும் 1997 ஆம் ஆண்டு எழுதிக் கொடுத்த அடமான பத்திரத்தில் விட்டு விட்டு எழுதி இருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு வாதிகளான அகிலா, மாலதி ஆகியோர் அடமானத்தை திருப்பினார்கள் என்றால் அவர்கள் மட்டும் திருப்பவில்லை. பொதுவில் எல்லோரும் திருப்பினோம். என் தாயார் அப்போது உயிருடன் இருந்தார். பொது பணத்திலிருந்து அவர் அடமானத்தை திருப்பினார். நான் உட்பட வேறு யாரும் பணம் எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்தில் உள்ள கட்டிடத்திற்கான வாடகை எனது இரண்டாவது அக்கா வசந்தா பெற்று அதனை வீட்டு வரி மற்றும் மற்ற வரிகளை செலுத்தி வருகிறார். என் முன் காட்டப்படும் புகைப்படங்கள் தாவா சொத்தை பொருத்து எடுக்கப்பட்டதாகும். ஆனால் அவை தற்போது இடிந்த நிலையில் உள்ளது. என் தகப்பனார் இறக்கும் வரை எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. 1997 ஆம் ஆண்டு வரை சொத்தின் மீது கடன்களைப் பெற்றார் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு கிரயம் செய்து பணம் வாங்கி இருந்தால் அவர் கடன்களை அடைத்து இருப்பார் என்றால் சரியல்ல.

வாதி கோரியபடி பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.